செய்தி வெளியீடு எண்: 188 நாள்: 01.03.2019

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 27.2.2019 அன்று தலைமைச் செயலகத்தில், தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்பில் சென்னை, தரமணியில் அமைந்துள்ள இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காவில், மத்திய அரசு, தமிழ்நாடு அரசு மற்றும் Pontaq நிறுவனத்தின் மூலதன நிதியம் ஆகியவை இணைந்து 23 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நிதி தொழில்நுட்ப சிறப்பு மையத்தினை துவக்கி வைத்தார்கள்.

2018–19ஆம் ஆண்டிற்கான தகவல் தொழில்நுட்பவியல் துறை மானியக் கோரிக்கையில், நிதித் துறையில் போட்டி, புதுமை, உற்பத்தித் திறன் உருவாக்கிடவும் மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்திடவும் ஒரு நிதி தொழில்நுட்ப சிறப்பு மையம் (Centre of Excellence of FinTech in Chennai) சென்னையில் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்பில் சென்னை, தரமணியில் அமைந்துள்ள இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காவில், மத்திய அரசு, தமிழ்நாடு அரசு மற்றும் Pontaq நிறுவனத்தின் மூலதன நிதியம் ஆகியவை இணைந்து 23 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள நிதி தொழில்நுட்ப சிறப்பு மையத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இந்த நிதி தொழில்நுட்ப சிறப்பு மையம் அனைத்து வணிகத்திற்கும், குறிப்பாக சிறு, குறு தொழில் நிறுவனங்களின் பொருளாதார வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்பினை மேம்படுத்திடவும் நிதியுதவி அளிக்கும். சென்னை, தரமணியில் உள்ள இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காவில் (Software Technology Parks of India) மத்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசு தலா 5 கோடியே 75 லட்சம் ரூபாயும், திருவாளர்கள் Pontaq நிறுவனத்தின் மூலதன நிதியம் (Venture Capital Fund) 11 கோடியே 50 லட்சம் ரூபாயும், என மொத்தம் 23 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இச்சிறப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், இப்புதிய நிதி தொழில்நுட்ப சிறப்பு மையத்தில் செயல்படவுள்ள திட்ட மேலாண்மை அமைப்பின் பங்குதாரர்களான M/s. Intellect Design Arena Ltd., M/s. Torus Innovations Pvt. Ltd., M/s. Royal Bank of Scotland Services India Private Limited (RBS), M/s. Yes Bank. M/s. PayPal, M/s. TIE, M/s. Pontaq ஆகிய நிறுவனங்களுக்கும், இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காவிற்கும் இடையே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.

பொதுமக்களுக்கான அரசுத் துறைகளின் சேவைகளை அவர்தம் இருப்பிடத்திற்கு அருகிலேயே பெற்றிட ஏதுவாக தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு மின்னாளுமை முகமை வாயிலாக அரசு இ–சேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த இ–சேவை மையங்களின் மூலமாக பொதுமக்கள் வருவாய் துறை, சமூகநலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், ஆகியவற்றின் சேவைகளை பெற்று வருகின்றனர்.

இந்த இ–சேவை மையங்களுக்கு பொதுமக்கள் அதிக அளவில் வருவதால், பொதுமக்கள் அரசுத் துறை சேவைகளை விரைந்து பெற்றிடும் வகையில் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் தனியார் இன்டர்நெட் மையங்கள் மூலமாக அரசின் இ–சேவைகளை வழங்கிட ஏதுவாக, தனியார் இன்டர்நெட் மையங்கள் நடத்துவோர்களிடமிருந்து பெறப்பட்ட விருப்ப படிவங்கள் பெறப்பட்டன. அவற்றை பரிசீலனை செய்ததன் அடிப்படையில், தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் ஒப்புதலோடு முதற்கட்டமாக **500** தனியார் இன்டர்நெட் மையங்களுக்கு அரசின் இ–சேவைகளை வழங்குவதற்கான அனுமதி கடிதங்களை வழங்குவதன் அடையாளமாக 7 தனியார் இன்டர்நெட் மைய உரிமையாளர்களுக்கு அனுமதி கடிதங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் வழங்கினார்கள்.

புதுதில்லியில் **22.2.2019** அன்று மத்திய அரசின் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை சார்பாக நடைபெற்ற Digital India Awards 2018 விழாவில், மாவட்ட இணையதளத்திற்கான Web Ratna – District பிரிவில், மாவட்டத்தின் வரலாற்று தகவல்கள், கணினிமயமாக்கப்பட்ட அரசு துறைகளின் தகவல்கள் போன்றவற்றை உடனுக்குடன் பொதுமக்கள் தெரிந்து கொள்ளும் விதமாக வேலூர் மாவட்ட இணையதளத்தில் பதிவேற்றம் செய்து சாதனை புரிந்தமைக்காக வேலூர் மாவட்ட

இணையதளம் தங்க விருதிற்காக தெரிவு செய்யப்பட்டு, மாண்புமிகு மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் அவ்விருதினை வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.எஸ்.ஏ. ராமன், இ.ஆ.ப., அவர்களிடம் வழங்கினார். இந்த Gold Web Ratna – District விருதினை வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.எஸ்.ஏ. ராமன், இ.ஆ.ப., அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்களிடம் காண்பித்து வாழ்த்து பெற்றார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் டாக்டர் எம்.மணிகண்டன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தகவல் தொழில்நுட்பவியல் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் சந்தோஷ் பாபு, இ.ஆ.ப., தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.எம். விஜயகுமார், இ.ஆ.ப., மின்னாளுமை ஆணையர் மற்றும் தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் தலைமை செயல் அலுவலர் திரு. சந்தோஷ் கே. மிஸ்ரா, இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.ஏ. ஜான் லூயிஸ், இ.ஆ.ப., இந்திய மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காவின் முதுநிலை இயக்குநர் (தலைமையகம்) திரு. தேவேஷ் தியாகி, இயக்குநர் (சென்னை) டாக்டர் சஞ்சய் தியாகி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
நாள்: 01.03.2019